भारत का राजपत्र

# The Gazette of India

इந்திய அரசிதழ்

असाधारण

**EXTRAORDINARY**

**சிறப்பிதழ்**

भाग XV अनुभाग 1

**Part XV Section 1**

**பகுதி XV பிரிவு 1**

प्राधिकार प्रकाशित

**PUBLISHED BY AUTHORITY**

**அதிகாரத்துடன் வெளியிடப்பட்டது**

---

नई दिल्ली, सोमवार, 10 सितमंबर 2001/1923 सका

New Delhi, Monday, 10th September 2001/1923 Saka

புது தில்லி, 2001 செப்டம்பர் 10, ஆம் நாள் திங்கட்கிழமை / 1923 சக


---

## Ministry of Law, Justice and Company Affairs (Legislative Department)

## சட்ட, நீதி மற்றும் நிறும அலுவல்கள் அமைச்சகம் (சட்டமியற்றுத் துறை)

The translation in Tamil of the Spices Board Act, 1986 (10 of 1986), The Lighthouse Act, 1927 (17 of 1927), The Salt Cess Act, 1953 (49 of 1953), The Contract Labour (Regulation and Abolition) Act, 1970 (37 of 1970), The Muslim Personal Law (Shariat) Application Act, 1937 (26 of 1937) are hereby published under the authority of the President and shall be deemed to be the Authoritative Texts thereof in Tamil under the clause (a) section 2 of the Authoritative Texts (Central Laws) Act, 1973 (50 of 1973).

நறுமணப் பொருள்கள் வாரியச் சட்டம், *1986 (10/1986)*, கலங்கரை விளக்கச் சட்டம் *1927 (17/1927)*, உப்பு மேல்வரிச் சட்டம், *1953 (49/1953)* ஒப்பந்தத் தொழிலாளர் (ஒழுங்குமுறைப்படுத்துதல் மற்றும் ஒழிப்புச்) சட்டம், *1970 (37/1970)*, முஸ்லீம் இனமுறைச் சட்டம் (ஷரியத்) பொருந்தச் செய்தல் சட்டம், *1937 (26/1937)* ஆகியவற்றின் தமிழ் மொழிபெயர்ப்பு, குடியரசுத் தலைவரின் அதிகாரத்தின்படி இதன்மூலம் வெளியிடப்படுகின்றன. அதிகாரவுரிமைப்படியான வாசகங்கள் (மையச் சட்டங்கள்) சட்டம், *1973 (50/1973)* இன்பிரிவு 2இன் கூறு (அ)வின்படி இவையே தமிழில் அதிகாரவுரிமைப்படியான வாசகங்களாக கொள்ளப்படுதல் வேண்டும்.

[Price : Rs. 30.00

# நறுமணப் பொருள்கள் வாரியச்சட்டம், 1986[1]

## (சட்ட எண் 10/1986)

[*1986, மார்ச்சு 20*]

நறுமணப் பொருள்களின் ஏற்றுமதியை மேம்படுத்துவதற்காக மற்றும் ஏலக்காய் பயிர் செய்தலை கட்டாளுகை செய்வது உள்ளடங்கலாக, ஏலக்காய்த் தொழிலைக் கட்டாளுகை செய்வதற்காக வாரியம் ஒன்றை அமைப்பதற்கும் அதனுடைய தொடர்புடைய பொருட்பாடுகளுக்கும் வகைசெய்வதற்கான ஒரு சட்டம்.

இந்தியக் குடியரசின் முப்பத்தேழாம் ஆண்டில் நாடாளுமன்றத்தால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

### அத்தியாயம் I

முன்னுரை

குறுந்தலைப்பு, அளாவுகை மற்றும் தொடக்கம்.

1. (1) இந்தச் சட்டம், நறுமணப் பொருள்களின் வாரியச் சட்டம், 1986 என்று வழங்கப்பெறும்.

(2) இது, இந்தியா முழுவதையும் அளாவிநிற்கும்.

(3) இது, மைய அரசாங்கம் அதிகாரமுறை, அரசிதழில் அறிவிக்கை வாயிலாகக் குறித்திடலாகும் தேதியன்று செல்லாற்றல்பெறும்.[2]

பொருள் வரையறைகள்.

2. இந்தச் சட்டத்தில், தறுவாயின் தேவை வேறானாலன்றி.,—

(அ) "வாரியம்" என்பது, பிரிவு 3இன் உட்பிரிவு (1)இன்படி அமைக்கப்பட்ட நறுமணப் பொருள்கள் வாரியம் என்று பொருள்படும்;

(ஆ) "ஏலக்காய்" என்பது, ஏலக்காய்ச் செடியின் கனி என்று பொருள்படும்; மற்றும் பச்சை ஏலக்காய், நிறமகற்றப்பட்ட ஏலக்காய், நிறமகற்றத்தக்க வெள்ளை ஏலக்காய், வெயிலில் உலர்த்தப்பட்ட ஏலக்காய், ஏலக்காய் விதைகள், தூளாக்கப்பட்ட ஏலக்காய், ஏலக்காயிலிருந்து பிழிந்தெடுக்கப்பட்ட எண்ணெய் ஆகியவற்றை உள்ளடக்கும்;

(இ) "ஏலக்காய்ச்செடி" என்பது, எல்லடாரியா கார்டமொம் மேடன் Elettaria Cardamomum Maton அம்மோமும் சபுலாடம் ரோக்ஸ்ப் Ammomum Subulatum Roxb மற்றும் வாரியம் இந்தச் சட்டத்தின் நோக்கங்களைப் பொறுத்தவரை, ஓர் ஏலக்காய்ச் செடி என அதிகாரமுறை அரசிதழில் அறிவிக்கை வாயிலாக விளம்பலாகும் ஏதேனும் பிற செடி என்று பொருள்படும்;

(ஈ) "உறுதிச்சான்று" என்பது, பிரிவு 12இன்படி வழங்கப்பட்ட ஓர் உறுதிச் சான்று என்று பொருள்படும்;

(உ) "வணிகர்" என்பது, நறுமணப் பொருள்களின் வணிகர் என்று பொருள்படும்;

(ஊ) "தோட்டம்" என்பது, ஏலக்காய்ச் செடிகளைப் பயிரிடும் நிலம் அடங்கியுள்ள ஒரு பிரிவாக நிருவகிக்கப்படும் பரப்பிடம் என்று பொருள்படும்:

---

1. மார்ச் 20, 1986 அன்று குடியரசுத் தலைவரின் இசைவினைப் பெற்றது மற்றும் 1986, மார்ச் 21 ஆம் தேதியிடப்பட்ட, இந்திய அரசிதழின் சிறப்பிதழ் பகுதி II, பிரிவு 1, பக்கங்கள் 1—15இல் வெளியிடப்பட்டது.

2. 26—2—1987 அன்று செல்திறம் பெறுமாறு செயற்படுத்தப்பட்டது. 26—2—1987 தேதியிடப்பட்ட 122 (உ) எஸ்.ஓ. பார்க்கவும், 26—2—1987 தேதியிடப்பட்ட இந்திய அரசிதழின் சிறப்பிதழ் பகுதி II, பிரிவு 3 (ii) இல் வெளியிடப்பட்டது.